www.padippakam.com



# துட்டகைமுனு சிங்கள மன்னனுமல்ல எல்லாளன் சோழப் படையெடுப்பாளனுமல்ல

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

7

கி.மு. 101 ஆம் ஆண்டில் எல்லாளனுக்கும் துட்ட காமினிக்கும் நடந்த யுத்தத்தை தமிழரின் ஆதிக்கத்திலிருந்து சிங்களவரை விடுவிக்க நடந்த யுத்தம் என்றே மகாவம்சப் பரம்பரையினர் இன்று வரை சொல்லி வருகின்றார்கள். ஆனால் துட்ட காமினி ஒரு பௌத்தன் (தேரவாதப் பிரிவு) மட்டுமே. அவனது ஆட்சி மொழியோ அவன் பேசிய மொழியோ சிங்களம் கிடையாது. அவனது ஆட்சிக் காலத்து கல்வெட்டுக்கள் மற்றும் சாசனங்கள் 'பாளி' மொழியில்தான் எழுதப்பட்டிருக்கின்றன.

எல்லாளனுக்கும் துட்டகாமினி (கைமுனு)க்கும் உள்ள விரோதம் என்பது மத அடிப்படையை மட்டுமே கொண்டது. மகாயான பௌத்தம் தமிழ் மொழியையும் தமிழகத்தையும் சார்ந்து வளர்ந்து வந்ததால் ஏற்பட்ட பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும், கி.பி 6-ம் நூற்றாண்டில் மகாவம்சத்தை எழுதிய தேரவாதப் பிக்குவை அதைத் தமிழருக்கு எதிரான யுத்தமாக வரலாற்றைத் திரித்தெழுத வைத்தது.

### எல்லாளன் ஒரு பேரரசன்


எல்லாளன் அனுராதபுரத்தை மட்டும் ஆண்ட ஒரு சிற்றரசன் கிடையாது. அவனது மேலாண்மைக்குக் கீழ் நூற்றுக் கணக்கான சிற்றரசுகள் இருந்ததற்கான குறிப்புக்கள் மகாவம்சத்தில் காணப்படுகின்றன. வடக்கே நாகதீபம் (குடா நாடு) உத்தரப்பிரதேசம் முழுவதிலும், கிழக்கே திகவாவி வரையிலும் மேற்கே கல்யாணி நதி(களனி கங்கை) வரையிலும் தெற்கே மலைநாடு முழுவதும் அவனது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களாக இருந்தன. குறிப்பாகச் சொன்னால் இலங்கையின் மூன்றில் இரண்டிற்கும் அதிகமான பகுதி எல்லாளனது ஆட்சிப் பிரதேசமாக இருந்தது.

### காமினியின் கனவு

தெற்கே உருகுணைப் பிரதேசத்திலுள்ள மகாகமையைச் சேர்ந்த ஒரு சிற்றரசனாக இருந்தவனே துட்டகாமினியாகும். இவன் மிகவும் துட்டத்தனம் உடையவனாக இருந்தமையினால் காமினி என்ற இவனது பெயருடன் 'துட்ட' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டு துட்டகாமினி (கைமுனு) என அழைக்கப்பட்டான் என நம்பப்படுகின்றது. ஒரு சமயம் இவன் கட்டிலில் கால்களை மடக்கிச் சுருண்டு படுத்திருந்தானாம். அதைக்கண்ட அவனது தாய் 'ஏன் மகனே இவ்வாறு படுத்திருக்கிறாய் கால்களை நீட்டி நிமிர்ந்து படுக்கலாமே?' என்று கேட்க, அவன் அதற்கு, 'அம்மா தெற்கே கடலும், வடக்கே தமிழர்களும் இருக்கும்போது நான் எவ்வாறம்மா எனது கால்களை நீட்ட முடியும்?' என்று பதில் சொன்னானாம்.

மகாவம்சம் சொல்லும் இந்தக் கதை கற்பனையாக இருந்தால் கூட, எல்லாளனுக்கு எதிராக யுத்தம் புரிய அவனுக்குண்டான தேவை பற்றிய ஒரு மறைமுக உண்மையை அது உணர்த்துகின்றது. காமினி சிங்களவன், எல்லாளன் தமிழன் என்ற பிரச்சனை அன்றில்லை. காமினியின் மொழி எல்லாளன் பேசிய தமிழ் மொழி அல்லது அதன் கிளை மொழியான 'எலு' மொழியே. ஆனால் பிரச்சினை என்பது காமினி கடைப்பிடித்த தேரவாத பௌத்த மதமே, அவனுடைய கால கட்டத்தில் அவன் மட்டுமே தேரவாதத்தைக் கடைப்பிடித்த ஒரே ஒரு மன்னனாக அதுவும் சிற்றரசனாக அறியப்படுகின்றான். ஆனால் அதேநேரம் எல்லாளனின் ஆட்சிக்குட்படாத உருகுணைப் பிரதேசத்தில் அதாவது காமினியின் ஆட்சிப் பிரதேசத்திற்கு அருகில் வைதீக இந்து மதத்தை கடைப்பிடித்த சிற்றரசுகள் இருந்ததை கதிர்காமக் கல்வெட்டுக்கள்*(1)* மூலம் அறிய முடிகின்றது. அவனது காலத்தில் எல்லா மதங்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் சம உரிமை கொடுத்த நல்லாட்சி நடாத்துகின்ற பேரரசனாகவும், பெரு நிலப் பரப்புக்குச் சொந்தக் காரனாகவும் எல்லாளன் இருந்தான். எனவே எல்லாளனை வெற்றி கொள்வதன் மூலம், தான் அவனைப்போன்ற ஒரு பேரரசனாக மாற வேண்டும் என்பதே காமினியின் குறிக்கோளாக இருந்தது. தெற்கே இந்து மகா சமுத்திரம் அங்கே எல்லைகளை விஸ்தரிப்பதற்கு அதற்குரிய கடற்படைப் பலமோ அல்லது நாடுகளோ காமினிக்குக் கிடையாது. வடக்கே தமிழர்கள் என்பது அக்காலத்தில்

இலங்கையில் இருந்த எல்லோருமே தமிழர்கள் தான். காமினி கடைப்பிடித்த தேரவாதப் பிரிவினர் மட்டுமே பாளி மரபைத் தூக்கிப் பிடித்தனர். எனவே தேரவாதப் பௌத்தன் ஒருவனை இலங்கை முழுவதற்கும் மன்னனாக்க வேண்டும் என்ற மத நோக்கத்திற்காக பௌத்த மகாசங்கம் காமினியின் பேராசையைத் தூண்டி விட்டது. பின்னால் மகாவம்சத்தை எழுதிய அதே பௌத்த சங்கத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு இந்தக் கதையைச் சொல்லி எல்லாளன் - காமினி யுத்தத்தை தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமான யுத்தமாகத் திரித்துவிட்டார்.




எல்லாளன் ஆட்சிப் பிரதேசம்

### காமினியின் படையெடுப்பு

மகாகமையிலிருந்து எல்லாளன் மீது படையெடுத்துச் சென்ற துட்டகாமினி அனுராதபுரத்தை அடைவதற்கு முன் தெற்கிலேயிருந்த 32 தமிழ்ச் சிற்றரசர்களுடன் போரிட்டு வெற்றி கொண்டதாகவும், இந்தப் போர் நீண்டகாலம் நடைபெற்றதாகவும், பல சிற்றரசர்களையும் படைத் தளபதிகளையும் நேரிலே போரிட்டு வெல்ல முடியாததால் சூழ்ச்சி செய்து அவர்களை வென்றதாகவும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இது காமினி அனுராதபுரத்துக்கு அவ்வளவு சுலபமாக வந்துவிட முடியவில்லை என்பதையும், எல்லாளனுக்கு இருந்த ஆதரவை அவ்வளவு சுலபமாக அவனால் முறியடிக்க முடியவில்லை என்பதையும் காட்டுவதாக தமிழ் வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளார்கள்.*(2)*

### காமினியின் சூழ்ச்சி

இவ்வாறு சூழச்சிகள் பல புரிந்து அனுராதபுரத்திற்குத் தெற்கே இருந்த சிற்றரசர்களை வீழ்த்திக்கொண்டு அனுராதபுரத்திற்கு வந்த காமினி அங்கே இருந்த எல்லாளனுடைய பெரும் படையுடன் மோதி வெல்ல முடியாது என்பதை உணர்ந்து கொண்டு, தனக்கே உரித்தான சூழ்ச்சித் தனத்தின் அடிப்படையில் படைகளோடு படைகள் மோதவிடாமல் தடுத்து எல்லாளனை நேருக்குநேர் சண்டைக்கு அழைத்தான். நீதியும் நேர்மையும் உயிர்கள் பால் அன்பும் உடையவனாகச் சித்தரிக்கப்படும் எல்லாளன், காமினியின் வஞ்சகத் தனத்தைப் புரிந்து கொள்ளாது அநியாய உயிரிழப்பைத் தடுக்கும் நோக்கில் தனது வயோதிபத்தையும் கணக்கிலெடுக்காது காமினியுடன் தனிச் சமருக்கு ஒத்துக் கொண்டான். அந்தச் சமரில் இளைஞனான காமினியுடன் அவன் சளைக்காமல் போர் புரிந்தாலும் வயோதிபம் காரணமாக காயமுற்று யானையிலிருந்து வீழ்ந்து இறந்தான்.

### மகாவம்சத்தின் பொய்ப்புகழ்ச்சி

எல்லாளன் யானையிலிருந்து வீழ்ந்து இறந்ததும், அவன் இறந்த இடத்தில் சமாதியும், ஆயிரங்கால் மண்டபமும் கட்டி அவ்வழியால் செல்வோர் வாகனங்களை நிறுத்தி மரியாதை செலுத்துமாறு துட்ட காமினி கட்டளையிட்டதாகவும், இது அவனுடைய போற்றத்தக்க புகழ்ச்சிக்குரிய செயல் எனவும், மகாவம்சம் புகழ்ந்துரைக்கின்றது. உண்மையில் வயது முதிர்ந்த ஒருவனை, இளமைத் துடிப்புள்ள ஒரு இளைஞன் தனிச்சமருக்கு அழைப்பது என்பது எந்த விதத்திலும் பெருமைக்குரிய விடயம் அல்ல. அது ஒரு இழிவான செயல். மாறாக வயது முதிர்ந்த எல்லாளன், இளைஞனான துட்டகாமினியுடன் தனிச்சமருக்கு ஒத்துக் கொண்டதுதான் வீரம் மிக்கதும், அநியாய உயிரிழப்புக்களை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதுமான பெருமைக்குரிய செயலாகும். மாறாக துட்டகாமினி, எல்லாளனைத் தான் வஞ்சகமாகக் கொன்றதால் தனக்கு ஏற்படக் கூடிய அவப் பெயரையும் மக்களுடைய எதிர்ப்பையும் சமாளிப்பதற்காகவே அவனுக்கு நினைவுச் சின்னம் அமைத்ததாக தமிழ் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.*(3)* ஆனால் மகாவம்ச ஆசிரியரோ எல்லாளனை விட காமினியையே உயிர்கள் மீது அக்கறையும் எதிரிக்கும் இரக்கம் காட்டும் பெரும் தன்மையும் மிக்கவனாகக் காட்ட முற்படுகின்றார். உண்மையில் புத்தரின் போதனைகளால் உந்தப்பட்டவனும் இலங்கைக்கு புத்த மதத்தை பரப்ப ஏற்பாடு செய்தவனுமான அசோகன் கலிங்கப் போரின் பின் யுத்தத்தை வெறுத்து பலாத்காரத்தைக் கைவிட்டு புத்தரின் போதனைகளை ஏற்று அன்பு வழியைக் கைக்கொண்டவன். ஆனால் துட்ட கைமுனுவோ அரியாசனத்தைக் கைப்பற்ற சூழ்ச்சிகள் பல புரிந்து பலாத்காரத்திலும் யுத்தத்திலும் ஈடுபட்டதென்பது பௌத்த தத்துவத்திற்கே விரோதமானது. அவன் உன்னதமான பௌத்த மன்னன் என்று சொல்வதற்குத் தகுதியற்றவன் என்பது வரலாற்றாசிரியர்களின் கருத்தாகும்.*(4)*

1. பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தமிழர் பற்றிக் கூறும் ஈழத்து பிராமிக்கல் வெட்டுக்கள்.
2. பேராசிரியர் ப. புஷ்பரத்தினம்.
3. பேராசிரியர் ப. புஷ்பரத்தினம்
4. சண்முகதாசன் இலங்கை வரலாறு.

**- நக்கீரன்**